# சர்வதேச விசாரணைக்கு இலங்கையில் இடமில்லை!



## ஜனாதிபதி திட்டவட்டம்

**“இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது” - என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைகள் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

**“இலங்கை அரசு சர்வதேச விசாரணைகளை நடத்தாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வெளித் தரப்பின் தலையீடு இல்லை, என அமெரிக்கா எப்.பி.ஐ. அறிக்கை வழங்கியுள்ளது.**

**இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் இரகசியப் பொலிஸாரும் அறிக்கைகளை வழங்கியுள்ளனர்.**

**இலங்கையில் எந்தவொரு விடயத்துக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்படாது” - என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (அ)**



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை 03.10.2023 கதிர் 84



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் முற்றாக முடங்கின!



முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் இன்றைய தினம் முடக்கப்பட்டுள்ளன. இதனால் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாக 2➤



## முல்லையில் நீதி கோரி போராடிய வடக்குக் கிழக்கு சட்டத்தரணிகள்!

முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் புறக்கணிப்பு நடவடிக்கைகள் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றன.

இந்நிலையில், வடக்குக் கிழக்கின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக அணிதிரண்டு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இருந்து பேரணியாக முல்லைத்தீவு நகரச்சுற்றுவட்டம்வரைசென்று மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டடம் முன்பாக வந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதித் துறைக்கான சுதந்திரமும், சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கிளிநொச்சியிலும் சாவகச்சேரியிலும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு



முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் சரவணராஜா அவர்களுக்கு நீதி வேண்டி முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டத்தரணிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் சட்டத்தரணிகள் இல்லாமையால் அவை வேறு திகதிகளுக்குத் தவணையிடப்பட்டன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்டு யாழ்.சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகளும் 2➤

## மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கம் மன்றுக்கு முன் கண்டன ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிகோரி மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றப் பணிபுறக்கணிப்புடன் நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டத்திலும் இன்று ஈடுபட்டனர்.

மட்டக்களப்புச் சட்டத்தரணிகள் சங்கத் 2➤



## திருமலையிலும் போராட்டம்!

முல்லைதீவு நீதிபதி ரீ. சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றத்துக்கு முன்னால் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று காலை திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தினால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தின்போது, சட்ட ஆட்சியை நிலை நிறுத்து, நீதித்துறையில் தலையிடாதே, நீதித்துறையைச் சுயமாக இயங்கவிடு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சட்டத்தரணிகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பட்டிருந்தது. (க)

## முல்லைத்தீவு நீதிபதிக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும்! - நீதி அமைச்சர்

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு அழுத்தங்கள் காரணமாக ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், அழுத்தங்களைப் பிரயோகித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் தம்வசம் காணப்பட்ட தருணத்திலும், அதனைச் செய்யாமைக்கான பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும், 2➤

# பூநகரி பிரதேச பண்பாட்டுப் பெருவிழா!

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள-த்தின் அனுசரணையுடன் பண்பாட்டுப் பேரவையும், பூநகரி பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று கிளிநொச்சி முக்கொம்பன் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பூநகரிப் பிரதேச செயலாளரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான த.அகிலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கும்மி ஆட்டம், காவடி ஆட்டம், கரகாட்டம் கொலாட்டம் போன்ற பாரம்பரிய கலாசார நடங்களோடு என்பவற்றோடு, பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள், அதிதிகளின் உரைகளும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (02)






# நிலவுக்கு அனுப்பப்படவிருக்கும் பாகிஸ்தனின் செயற்கைக்கோள்

நிலவுக்கு மீண்டும் 2024 இல் 'சாங்ஏ-6' என்ற விண்கலத்தை அனுப்பவிருக்கும் சீனா, அதனுடன் பாகிஸ்தானின் சிறிய செயற்கைக்கோள் ஒன்றையும் எடுத்துச் செல்லவிருக்கிறது.

நிலவில் தொலைதூரப் பகுதியிலிருந்து மண், கல் மாதிரிகளை பூமிக்கு எடுத்து வருவதற்கான இந்த ஆய்வுத் திட்டத்தின் கீழ், பாகிஸ்தான் மட்டுமின்றி பிரான்ஸ், இத்தாலி, ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் ஆகியவற்றின் ஆய்வுக் கருவிகளையும் சீனா அனுப்பவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)



## முல்லைத்தீவு நீதிபதிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கான பொறுப்பை அரசாங்கத்தின் பக்கம் திருப்புவதை நிறுத்த வேண்டும், எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அச்சுறுத்தல்களைப் பிரயோகித்தவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்காதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது, எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (க)

## மட்டக்களப்பு சட்டத்தரணிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி பி.பிறேமநாத், பணிப் புறக்கணிப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து இன்று காலை 10 மணிக்கு மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக்கு முன்னால் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, நீதித்துறைச் சுதந்திரத்துக்காய்க் குரல் கொடுப்போம், சட்டத்தின் முன் யாவரும் சமம், நீதித்துறையை அச்சுறுத்தாதே, பாரபட்சமற்ற விசாரணை வேண்டும், சுதந்திரத்தில் தலையிடாதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியாக நீதிமன்ற வீதிச் சுற்றுவட்டத்திற்குச் சென்று மீண்டும் நீதிமன்றக் கட்டிடத் தொகுதிக்கு முன்னால் சென்றடைந்து நீதி கோரி சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர். (க)

## கிளிநொச்சியிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக வழக்கு விசாரணைகள் இடம்பெறவில்லை. அங்கும் வழக்குகள் தவணையிடப்பட்டன. (01, 02)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளும் முற்றாக முடங்கின.

யாழ் மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு நேற்றைய தினம் ஒன்றுகூடி முக்கிய பல தீர்மானங்களை எடுத்திருந்தனர். இதன்போதே முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட்சியை நிலைநாட்டவும் ஏதுவாக இன்றும் நாளையும் சட்டத்தரணிகள் வடமாகாண நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரிப்பது என தீர்மானம் எடுத்திருந்தனர்.

நாளையும் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# யாழ்ப்பாணத்தில் ஜப்னா ஸ்ரான்லியன்ஸ் நடாத்தும் கிரிக்கெட் பயிற்சி முகாம்




இலங்கை அணியின் முன்னாள் பிரபல பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் தலைமையிலான குழுவினரால் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் பயிற்சி முகாம் நடாத்தப் படவுள்ளதாக ஜப்னா ஸ்ரான்லியன்ஸ் இயக்குநர் க.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

திறமையானவர்களைக் கண்டறிவதற்கான பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் எமது தலைமைப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸ் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்படவுள்ளது. சிறந்த வீர, வீராங்கனைகள் அடையாளம் காணும் முயற்சியே இதுவாகும்.

13 வயதில் இருந்து 25 வயது வரையிலான வீர, வீராங்கனைகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்க முடியும்.

பங்கேற்க விரும்புவோர் 0778013310 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

அதேவேளை, நாம் கிரிக்கெட் அக்கடமி ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவி வருகின்றோம். அது தற்போது நிறைவுறும் தருவாயில் உள்ளது. அதில் விசேட பயிற்சிகளை வழங்கி, திறமையான வீரர்களை உருவாக்க உள்ளோம். அதற்கான வீரர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான முதல் கட்டமே இந்தப் பயிற்சி முகமாகும்.

இதில் பாடசாலை மாணவர்கள், கழகங்கள், மாவட்டக் கிரிக்கெட் சங்க வீரர்கள் எனச் சகலரும் பங்கேற்க முடியும். இதில் 100 தொடக்கம் 150 பேர் வரையில் தேர்வு செய்யவுள்ளோம்.

தேர்வு செய்யப்படப்படும் வீர, வீராங்கனைகள் எம்மால் நிர்மாணிக்கப்படும் கிரிக்கெட் அக்கடமியில் மேலும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் ஊடாக அவர்கள் தமது திறமையை மெருகேற்றிக் கொள்வதன் மூலமாக வடக்கில் சிறந்த துடுப்பாட்ட வீர, வீராங்கனைகள் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எம்மால் உருவாக்கப்படும் வீர, வீராங்கனைகளை வெளிநாட்டுக் கழகங்கள், சுற்றுப்போட்டிகள் என்பவற்றில் பங்கேற்க முடிந்தவரையில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்போம், எனவும் அவர் தெரிவித்தார். (01)

# மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்

## சி.வி.கே.சிவஞானம் வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் நாளைய தினம் மேற்கொள்ளப்படவுள்ள மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டம் வெற்றி அளிப்பதற்கு தமிழ் மக்கள் தங்கள் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும், என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மருதனார்மடம் சந்தியில் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பம் ஆகும் மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி முட்டாஸ் கடைச் சந்தியில் காலை 10 மணியளவில் நிறைவடையவுள்ளது.

எனவே, அனைத்து தமிழ் மக்களும் கட்சி பேதங்களை கடந்து எமது முழுமையான எதிர்ப்பினை காட்டும் முகமாக குறித்த மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரும்



மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு அனைவரும் ஒன்றிணைத்து எமது எதிர்ப்பினைக் காட்டுவதன் மூலமே நீதித் துறையின் சுயாதீனம் மற்றும் நீதிபதிகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய முடியும்.

எனவே, அனைவரும் அணிதிரண்டு எமது கண்டனத்தை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் காட்டுவோம், என்று அவர் தெரிவித்துள்ளார். (04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# பொத்துவில் முனவ்வறா வித்தியாலய சிறுவர் தின கொண்டாட்டம்



(எம்.எப். நவாஸ்)

பொத்துவில் முனவ்வறா வித்தியாலய அதிபர் எம்.ஐ.சபுர்டீன் தலைமையில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு மாணவச் சிறுவர்களின் பாடல், நடனம், பேச்சு எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முசாரப் அவர்களினால் மாணவர்களுக்குப் புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைக் குறிப்பாக, கல்வித்துறைக்கு ஆற்றிவருவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் பாடசாலைச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# வீதி நாடகத்துடன் நடந்தேறிய கல்முனை வலய சிறுவர் தினம்






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த சிறுவர் தின நிகழ்வு பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா தலைமையில் நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

நிகழ்வின் விசேட அம்சமாக 'சிறுவர் எதிர்காலம்' எனும் கருப் பொருளில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்களின் வீதி நாடகமொன்றும் இடம்பெற்றது.

ஊர்வலம், விளையாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் உட்படப் பலவும் அரங்கேறின. மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி சிறுவர் - மாணவர் தலைவர் நிகழ்வு






(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வும் மாணவர் தலைவர்களுக்கான நிகழ்வும் இன்று சிறப்பாக நடைபெற்றன.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் அதிதிகளாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீவன், கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து, கல்முனை ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் வி.நிர்மலன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மாணவர் தலைவர்களுக்குச் சின்னங்களும் சூட்டப்பட்டன.

# இந்திய மார்க்க அறிஞர்கள் பங்கேற்ற அட்டாளைச்சேனை மீலாதுன் நபி விழா

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை ஜு/ம்மா பள்ளிவாசல் பிரதான வீதி முற்றத்தில் மீலாதுன் நபி விழா, செய்யது ஹசரத் மௌலானா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது இந்திய மார்க்க அறிஞர்கள் கலந்து சொற்பொழிவு நிகழ்த்தியதுடன் உலாமாக்களினால் நபி (ஸல்) அவர்கள் பற்றி விரிவான விளக்க உரைகள் மற்றும் இஸ்லாமிய கீதங்களும் அரங்கேற்றப்பட்டன.






# உக்ரைனுக்கு இராணுவத்தை அனுப்பும் திட்டமில்லை பிரித்தானியப் பிரதமர் மன்செஸ்டரில் அறிவித்தார்!



உக்ரைனுக்கு தங்கள் நாட்டு வீரர்களை அனுப்பும் திட்டமில்லை என்று பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

முன்னதாக, உக்ரைன் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக தங்கள் படையினர் அந்த நாட்டுக்கு அனுப்பப்படலாம் என்று பிரித்தானியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரான்ட் ஷாப்ஸ் கூறியிருந்த கருத்தைத் திரும்பப் பெறும் வகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மன்செஸ்டர் நகரில் நடைபெற்ற ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் ஆண்டுக் கூட்டத் தொடக்கத்தின்போது செய்தியாளர்களிடம் பேசிய சுனக், உக்ரைன் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக பிரிட்டன் வீரர்களை அங்கு அனுப்புவதற்கான திட்டம் எதுவும் தற்போதைக்கு இல்லை. இது தொடர்பாகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரான்ட் ஷாப்ஸ் கூறிய கருத்து, என்றாவது ஒரு நாள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை மட்டுமே பிரதிபலிக்கிறது. எதிர்காலத்தில் உக்ரைன் வீரர்களுக்கு அந்த நாட்டில் பிரிட்டன் இராணுவத்தினர் பயிற்சியளிக்கலாம், என்று தெரிவித்திருக்கிறார்.

முன்னதாக, 'சண்டே டெலிகிராப்' இதழுக்கு பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரான்ட் ஷாப்ஸ் அளித்த பேட்டியில், இராணுவ உயரதிகாரிகளுடன் ஆலோசித்த பிறகு உக்ரைன் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அந்த நாட்டுக்கு பிரிட்டன் படையினர் அனுப்பப்படலாம் என்று கூறியிருந்தார்.

இதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இது குறித்து ரஷ்யாவின் முன்னாள் அதிபர் டிமித்ரி மெத்வடெவ் கூறுகையில், உக்ரைனுக்கு வரும் பிரிட்டன் படையினர் குறிவைத்துத் தாக்கப்படுவார்கள். அதற்கான சட்டபூர்வ உரிமை தங்களுக்கு உள்ளது என்று எச்சரித்திருந்தார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. அந்தப் பகுதிகளை மீட்பதற்காக உக்ரைன் எதிர்த் தாக்குதல் நடத்தி வருகிறது.

உக்ரைனின் போரிடும் திறனைக் குறைப்பதற்காக அந்த நாட்டின் தலைநகர் கீவ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆளில்லா விமானக் குண்டுகள், ஏவுகணைகள், எறிகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

உக்ரைனும், ரஷ்யாவின் விமானத் தளங்கள், போர்க் கப்பல்கள், துறைமுகங்கள், தலைநகர் மொஸ்கோ போன்ற பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஏராளமான ஆயுத உதவிகளை அளித்து வருகின்றன. இருந்தாலும், போரில் தங்களது வீரர்களை நேரடியாக ஈடுபடுத்துவதை அந்த நாடுகள் தவிர்த்து வருகின்றன. பிரிட்டனும், சுமார் 20,000 உக்ரைன் வீரர்களுக்குத் தங்கள் நாட்டில் வைத்துக் கடந்த ஆண்டு பயிற்சியளித்தது குறிப்பிடத்தக்கது. (04)



# மோசடி வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜரானார் ட்ரம்ப்

தனது சொத்துகளின் மதிப்பை மிகைப்படுத்திக் கூறி மோசடியில் ஈடுபட்டதாக அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிராக நடைபெற்று வரும் வழக்குத் தொடர்பாக, நியூயோர்க் நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜரானார்.

அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர்களில் ஒருவரான ட்ரம்ப், அந்த நாட்டின் அதிபராக கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தார். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அவர் 2020 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், தனது சொத்துகளின் மதிப்பை அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்திக் கூறி மோசடியில் ஈடுபட்டதாக ட்ரம்ப் மீது நியூயோர்க் நீதிமன்றத்தில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தலைமை வழக்கறிஞர் லெடிடியா ஜேம்ஸ் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில், ட்ரம்ப் மற்றும் அவரது இரு மகன்கள் மோசடியில் ஈடுபட்டதாக நீதிபதி ஆர்தர் எங்கோரான் கடந்த மாதம் 26 ஆம் திகதி உறுதி செய்தார். அதையடுத்து, அந்த நீதிமன்றத்தில் டொனால்ட் ட்ரம்ப் திங்கள்கிழமை ஆஜரானார்.

இது ஒரு சிவில் வழக்கு என்பதால் இந்த வழக்கில் ட்ரம்ப் ஆஜராவது கட்டாயமில்லை. இருந்தாலும், அவர் தாமாக முன்வந்து நீதிமன்றத்தில் ஆஜரானார். இந்த வழக்கில், மோசடிக் குற்றத்துக்காக ட்ரம்ப்புக்கு 25 கோடி டொலர்கள் அபராதம் விதிக்கப்பட வேண்டும் எனவும், நியூயோர்க்கில் தொழில் செய்ய அவருக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் தலைமை வழக்கறிஞர் லெடிடியா ஜேம்ஸ் கோரியுள்ளார்.

எனவே, இந்த வழக்கில் ட்ரம்ப் குற்ற வாளியாக அறிவிக்கப்பட்டால் நியுயோர்க்கில் உள்ள ட்ரம்ப் டவர், வோல்ஸ்ட்ரீட் பகுதியிலுள்ள ஓர் அலுவலகக் கட்டடம், கோல்ப் மைதானங்கள் மற்றும் புகர்ப் பகுதியிலுள்ள ஒரு பண்ணை வீடு ஆகிவற்றின் கட்டுப்பாட்டை ட்ரம்ப் இழக்க நேரிடும்.

ஏற்கெனவே அதிபர் தேர்தல் முடிவுகளை மாற்ற முயன்றது, தேர்தல் பிரசாரத்தின்போது பழைய இரகசியத்தை மறைப்பதற்காக நடிகைக்கு முறைகேடாகப் பணம் கொடுத்தது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளில் முகாந்திரங்கள் உள்ளதாக நீதிமன்றங்கள் அறிவித்தன. அதையடுத்து, அந்த நீதிமன்றங்களில் நேரில் ஆஜராக வேண்டிய நிலை ட்ரம்ப்புக்கு ஏற்பட்டது. இந்த வழக்குகளில் சிறைத் தண்டனையையும் அவர் எதிர்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், மோசடி வழக்கில் நீதிமன்றத்தில் ட்ரம்ப் ஆஜராகியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும், தன் மீதான மோசடி வழக்கு அரசியல் காரணங்களுக்காகவே தொடரப்பட்டுள்ளது என்று ட்ரம்ப் குற்றம் சாட்டியிருந்தார். இது குறித்து அவர் கூறுகையில், 'என் மீதான பிற வழக்குகள் போலவே இந்த வழக்கும் சோடிக்கப்பட்டதே! அரசியலில் என்னை வீழ்த்துவதற்காக இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இருந்தாலும், இதனை அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார். (04)



# ஸ்பெயின் இரவு விடுதியில் தீ 13 பேர் உயிரிழந்தனர்

ஸ்பெயினில் உள்ள இரவு விடுதியொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும் இருவரைக் காணவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முர்சியா நகரில் அனுமதி இல்லாமல் இயங்கி வந்த இரவு விடுதியொன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணிக்கு தீவிபத்து ஏற்பட்டது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். விபத்து நேரிட்டபோது அங்கிருந்த 2 பேரைக் காணவில்லை. உயிரிழந்தவர்களில் ஸ்பெயின் நாட்டவர்கள் மட்டுமின்றி, கொலம்பியா, ஈக்வடோர், நிகரகுவா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். விபத்தில் காயமடைந்த 24 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயினில் கடந்த 1990 இல் ஏற்பட்ட இரவு விடுதித் தீவிபத்தில் 43 பேர் உயிரிழந்திருந்தனர். தற்போது முர்சியாவில் ஏற்பட்டுள்ள தீவிபத்து அதற்கு அடுத்த மிக மோசமான இரவு விடுதி விபத்து என்று கூறப்படுகிறது. (04)

# ஒரே ஒரு இ-சிகரெட் வைத்திருப்பதும் குற்றமே! இந்திய மத்திய அரசு எச்சரிக்கை வெளியிட்டது

மின்னணுச் சிகரெட் எனப்படும் இ-சிகரெட்டுக்கு இந்திய மத்திய அரசு கடந்த 2019ஆம் ஆண்டு தடை விதித்துச் சட்டம் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில், இ-சிகரெட் எனப்படும் மின்னணுச் சிகரெட்டுகளை உற்பத்தி செய்தல், ஏற்றுமதி - இறக்குமதி, விற்பனை, விநியோகம், இருப்பில் வைத்திருப்பது, இ-சிகரெட் குறித்து விளம்பரம் செய்வது ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டது.

ஆனால், அதில் இ-சிகரெட்டின் தனிப்பட்ட பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. இ-சிகரெட் தடைச் சட்டத்தையும் மீறி, மக்களிடையே அதிக அளவில் புழங்குவதாக வந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, இ-சிகரெட் தடையை உறுதியுடன் அமுல்படுத்துமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் இந்திய மத்திய அரசு கடிதம் எழுதியிருக்கிறது.

மேலும் அந்த சிகரெட் விற்பனையில் ஈடுபடும் 15 இணையதளங்களுக்கும் நோட்டீஸ் பிறப்பித்திருக்கிறது. இதற்கிடையே, இ-சிகரெட்டை எந்த வடிவிலும், எந்த எண்ணிக்கையிலும், எந்த முறையிலும் வைத்திருப்பது இ-சிகரெட் தடைச் சட்டத்துக்கு எதிரானது என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே, ஒரே ஒரு இ-சிகரெட் வைத்திருப்பதும் குற்றமே என்று இந்திய மத்திய அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது. அது மட்டுமல்லாமல், இ-சிகரெட் வைத்திருப்பவர்கள் குறித்து புகார் அளிக்க இந்திய மத்திய அரசு தனியாக இணையத்தளம் ஒன்றையும் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (04)

# கடலரிப்பைத் தடுக்கும் வேலைத்திட்டம் சாய்ந்தமருதில் ஹரீஸ், அதாஉல்லா எம்.பிக்கள் ஆரம்பித்து வைத்தனர்



(நூருல் ஹுதா உமர்)

அதிகமான கடலரிப்பைச் சந்தித்துள்ள அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பிரதேசக் கடலரிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டிடத்தொகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், சாய்ந்தமருதில் கடலரிப்புத் தடுப்பு நடவடிக்கைக்கான ஆரம்ப கட்ட வேலைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கின் நெறிப்படுத்தலில் கரையோரம் பேணல் திணைக்கள மாகாணப் பொறியியலாளர் எம்.துளசிதாசனின் அழைப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

55 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட இந்த வேலைத் திட்டத்தின் பணிகளைத் தொடங்கி வைத்த இந் நிகழ்வில், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகக் கிராம நிலதாரி ஏ.எம்.ஏ.நளீர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.நிஷார்தீன், சாய்ந்தமருதுப் பிரதேச செயலகக் கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச முக்கியஸ்தர்கள், மீனவ சங்க நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி பொன்விழா அகவையில் 1973 அணியினர்



(காரைதீவு செய்தியாளர்)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் பயின்று 50 ஆவது அகவையை எட்டிய 1973 பிறந்த அணியினர் பொன்விழா நிகழ்வை கொண்டாடியுள்ளனர்.

பொன்விழா அணியின் தலைவர் நாகலிங்கம் சசிதரன் தலைமையில் இப்பொன்விழா நிகழ்வு காரைதீவு விபுலானந்தர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், இவ்வணியினருக்கு 1989 இல் சாதாரண தரத்திலும் 1992 இல் உயர்தரத்திலும் கற்பித்த ஆசிரியர்கள் 20 பேர் மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்கள். பின்னர் மேடையில் வரவேற்புரையை செயலாளர் சீ.திருக்குமார் நிகழ்த்த, உபசெயலாளர் கண.தங்கநேசன் விளக்க உரையாற்றினார். தொடர்ந்து ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அதேபோன்று 48 குடும்பங்களுக்கும் சாதனை படைத்த மாணவர்களுக்கும் அதே ஆசிரியர்கள் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்கள். சிறப்புரையை ஆசிரியர்கள் சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார் .

பட்டிமன்றம், கவிதை, பாடல் போன்ற நிகழ்ச்சிகள் மேடை ஏறின. பொன்விழா அணியைச் சேர்ந்த டொக்டர் இ. உதயகுமார் கவிதை வழங்க, பிரதேச செயலாளர் உதயசிறிதர் பாடல்களைப் பாடினார். மேலும் பல அங்கத்தவர்களும் பிள்ளைகளும் கலை நிகழ்வுகளைப் படைத்தனர்.

விருந்துபச்சாரத்தின் பின்னர், உறுப்பினர் திருமதி யமுனா இளஞ்செழியன் நன்றியுரையாற்றினார்.




# சாவகச்சேரியில் பழம்பெரும் வேப்பமரம் முறிந்து வீழ்ந்தது



யாழ்.சாவகச்சேரி நகரிலிருந்த 200 ஆண்டுகள் பழமையான வேப்பமரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த வேப்பமரமானது ஏ9 வீதிக்குக் குறுக்காக மின்சாரக் கம்பங்கள் மீது வீழ்ந்துள்ளது. அதனால், சாவகச்சேரி நகருக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. ஏ9 வீதிப் போக்குவரத்தும் 30 நிமிடங்கள் வரை நிறுத்தப்பட்டிருந்தது.

மரம் முறிந்து வீழ்ந்ததால், சிறு முயற்சியாளர் ஒருவரது பெட்டிக்கடையும் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளன. (02)

# ஓகஸ்ட் மாதத்தில் கட்டுமான பணிகளில் பின்னடைவு - மத்திய வங்கி அறிக்கை

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நிர்மாண நடவடிக்கைகளில் மோசமான செயல்திறன் காணப்பட்டுள்ளதாகவும், கட்டுமான நடவடிக்கைகளின் இந்தப் பலவீனமான செயல்திறன் காரணமாக ஒட்டுமொத்தச் செயல்பாட்டுக் குறியீடு 47 அலகுகளின் மதிப்பைப் பதிவு செய்துள்ளது என மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, கிடைக்கப்பெறும் வரையறுக்கப்பட்ட திட்டங்களுக்கு அதிக போட்டித்தன்மையுடன் கூடிய ஏலம் விடப்பட்டதன் காரணமாகவே தமது விலைகளைக் குறைக்க நேரிட்டதாக இந்தக் கணக்கெடுப்பின்போது பதிலளித்தவர்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

புதிய திட்டங்கள் இல்லாமையானது கட்டுமான நடவடிக்கைகளில் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் காரணமாக கட்டளைகளில் தொடர்ச்சியான சரிவை அது பிரதிபலித்துள்ளதாகவும் மத்திய வங்கி மேலும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ரெ-06)

# உயர்தரப் பரீட்சை திகதி விரைவில்!

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதி அடுத்த சில நாட்களில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நாடாளுமன்றில் இன்று தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் முன்னர் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தன. (04)

# தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சிலர் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு இடையூறு

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை ஆணையத்தில் உறுப்பினர்களாக உள்ள தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூட உரிமையாளர்கள் ஏழு பேர், மேற்படி ஆணையகத்தை கணக்காய்விற்கு உட்படுத்த அனுமதிக்காமல் தடுத்து வருவதாகக் கணக்காய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள தனியார் மருத்துவமனைகள், மருத்துவ நிலையங்கள் மற்றும் ஆய்வுகூடங்களின் கட்டுப்பாடுகள் மிகவும் பலவீனமாக உள்ள போதிலும், சில உறுப்பினர்களின் செயற்பாடுகள் நோயாளர்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும் சுகாதாரத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சுகாதார சேவை வழங்கும் சில தனியார் மருத்துவ நிலையங்களில் நோயாளர்களிடம் கட்டுப்பாடின்றி பணம் அறவிடப்படுவதுடன், வழங்கப்படும் மருத்துவப் பதிவேடுகளில் சிக்கல்கள் காணப்படுவதாகவும், இந்த விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆணைக்குழு இவை தொடர்பில் மௌனமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் சுகாதார சேவை பாரியளவில் வீழ்ச்சியடைந்து வரும் இவ்வேளையில், தனியார் சுகாதார ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சிலர் கணக்காய்வு நடவடிக்கைகளை தடுத்து வருகின்றமை தொடர்பில் ஆராய்ந்து ஆணைக்குழுவை புதுப்பிக்க வேண்டும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். (ரெ-02)

# அரசியல் நியமனங்களின் அடிப்படையிலேயே 70 வீத ஊழியர்கள் -மன்றில் அமைச்சர் ஜீவன்



தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் உள்ள பெருமளவிலான ஊழியர்கள் அரசியல் நியமனங்களின் அடிப்படையில் சேவையில் இணைந்தவர்கள் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அவர், சுமார் 70 சதவீதமான ஊழியர்கள் திறமையற்றவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பல துறைகளில் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருந்தாலும் சில துறைகளில் ஊழியர்கள் அதிகளவில் இருப்பதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஆகவே, புதிதாக ஊழியர்களை நியமிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். (04)



# முன்னாள் பிரதம நீதியரசர் வீட்டில் திருடர்கள் கைவரிசை

முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வாவின் கட்டானப் பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் காணப்பட்ட பித்தளை யானை, சிறிய தாஜ்மஹால் மாதிரி காட்சிப் பொருள் உள்ளிட்ட பல பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கொச்சிக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என்.சில்வா கொழும்புப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டுள்ள அதேவேளை, கட்டான பிரதேசத்திலுள்ள அவரது மற்றொரு வீட்டின் பின்புறக் கதவை உடைத்துத் திருடர்கள் இந்தத் திருட்டுச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டையும் அதன் வளவுப் பகுதியையும் கண்காணிப்பதற்குப் பகலில் மட்டுமே காவலாளி ஒருவர் இருப்பதாகப் பொலிஸார் தரப்பில் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த வியாழனன்று (28) வழமைபோல் காலை வேளை, முன்னாள் பிரதம நீதியரசரின் வீட்டுக்கு வந்த காவலாளி, வீட்டைச் சுற்றிச் சோதனையிட்டபோது வீட்டின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்.

பொலிஸார் சோதனை செய்ததில் அங்கிருந்து பல பொருட்கள் திருட்டுப் போயிருப்பது தெரியவந்தது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொச்சிக்கடைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீனக்க ஜெயக்கொடி உள்ளிட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ரெ-03)

# காது குடைப்பான்களால் காதுகளைக் குடைந்து காயங்களுக்குள்ளாகி மருத்துவமனைக்கு வரும் சிறுவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

## *சிறப்பு மருத்துவ நிபுணர் தீப்பால் பெரேரா*

பஞ்சினாலான காது குடைப்பான்களால் காதுகளைக் குடைந்து, காயங்களுடன் மருத்துவமனைக்கு வருகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனப் பொரளை சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர் டொக்டர் தீப்பால் பெரேரா தெரிவித்தார்.

அவ்வாறு செய்வதன் மூலம், காதில் ஏற்படும் காயத்தின் மூலம் தொற்று ஏற்பட்டு கிருமிகள் மூளைக்குச் செல்லக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மருத்துவ நிபுணர் தீப்பால் பெரேரா மேலும் தெரிவிக்கையில், "சிறு குழந்தைகளின் காதுகளில் அடைபட்டுள்ள மெழுகினை அகற்றப் பல பெற்றோர்கள் 'இயர் பட்' எனும் இந்தக் காது குடைப்பான்களைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு செய்வதால் அது குழந்தையின் காதில் காயத்தை ஏற்படுத்தி காதில் சீழ் வடிதலையும் ஏற்படுத்தும். இதன் மூலம், கிருமிகள் காதுக்குள் சென்றால், அது மூளையிலும் பாதிப்பை ஏற்படுத்தி குழந்தையின் உயிருக்கே அது ஆபத்தாக முடிந்துவிடும்.



எனவே, குழந்தைகளின் காது மெழுகினை அகற்றுவதற்கு மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியம். குழந்தைகளின் காதிலுள்ள மெழுகினைக் காது குடைப்பான்கள் மூலம் அகற்றுவதை மருத்துவர்களாகிய நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்றார். (ரெ-05)

# நாட்டில் மூவாயிரம் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை

குடும்ப நல சுகாதார சேவைகளுக்காக 2021 இல் நேர்காணல் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 1538 பேர் இன்னும் பயிற்சிக்கு அழைக்கப்படவில்லை. இது மிகவும் அநீதியானதாகும். இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அரசாங்கக் குடும்ப நலச் சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

ஏற்கனவே 3000 குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேவிகா கொடிதுவக்கு மேலும் தெரிவிக்கையில், "தற்போது குடும்ப நலச் சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால், சிறுவர் மற்றும் மகப்பேற்று சுகாதார சேவைகள் பாதிக்கப்படலாம். இந்த 1538 பேரையும் விரைவில் பயிற்சிக்கு சேர்க்குமாறு சுகாதார அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்ப நலச் சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் கடுமையான பற்றாக்குறைக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் குடும்ப நல சுகாதார சேவைகளை முறையாக முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்படும் " என்றும் அவர் தெரிவித்தார். (ரெ-04)



# நாளை மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து பிரசுரங்கள் விநியோகம்



முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகலுக்கு கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு ஆதரவு கோரி சுன்னாகம் பகுதியில் இன்று காலை துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. (க)

# யாழில் குடிநீருக்காக 10 இலட்சம் செலவு – அரச அதிபர் தெரிவிப்பு



யாழ் மாவட்டத்தில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடி நீரை வழங்குவதற்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

கடந்த இரு மாதங்களாக யாழ் மாவட்டத்தில் அதிகளவிலான வெப்பநிலை நிலவிய நிலையில், சில பிரதேசங்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

யாழ் மாவட்டத்தில் சுமார் 9,535 குடும்பங்கள் வறட்சியால் குடிநீர்ப் பிரச்சனையை எதிர்கொண்ட நிலையில் அவர்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கப்பட்டது.

மாவட்டத்திலுள்ள நீர் தேங்கக் கூடிய குட்டைகள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்கள் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் தூர் வாரும் மற்றும் துப்புரவு செய்யும் செயற்றிட்டங்கள் இடம் பெற்றன.

அண்மையில் யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்த அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளிடம் எமது பகுதிகளில் உள்ள நீர் நிலைகளைத் தூர்வாரி, ஆழமாக்கித் தருமாறு கோரிக்கை முன் வைத்துள்ளோம்.

ஆகவே, எமது கோரிக்கைகளுக்கான திட்டங்களைத் தருமாறு ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மாகாண மேலதிகச் செயலாளர் கோரியிருக்கின்ற நிலையில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும், எனவும் அவர் தெரிவித்தார். (04)

# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விலகல் இரு விசாரணைக்குழுக்கள் நியமனம்

கொழும்பு, ஒக். 03

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா, பதவி விலகி நாட்டிலிருந்து வெளியேறியமை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இரு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் பணிப்புரைக்கு அமைய, குறித்த விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## யாழில் குழந்தை பிறந்து 20 நாளில் தாய் தற்கொலை

குழந்தை பிறந்து 20 நாள்கள் கடந்துள்ள நிலையில் தவறான முடிவெடுத்து தாய் ஒருவர் தற்கொலை செய்துக் கொண்டுள்ள சம்பவமொன்று யாழ்ப்பாணம் ஆனைப்பந்திப் பகுதியில் பதிவாகியுள்ளது.

40 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பெண்ணுக்குத் திருமணமாகி ஏழு ஆண்டுகளின் பின்னர் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குழந்தை பிறந்து 20 நாள்கள் கடந்துள்ள போதும், தாய்ப்பால் சுரக்கவில்லை என்ற மன அழுத்தத்தில் குறித்த பெண் இருந்துள்ளாரெனவும், அதன் காரணமாகவே அவர் நேற்று தவறான முடிவெடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் உறவினர்கள் தந்த தகவல்கள் கூறுகின்றன.

குறித்த பெண்ணின் இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் தயான் அன்ரலா மேற்கொண்டுள்ளார். (04)

## நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

இலங்கை நாடாளுமன்றத்தில் நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தின் சர்ச்சைக்குரிய சில அம்சங்கள் பல தரப்பினதும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தன. இந்தப் பின்புலத்திலேயே நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (க)

# மாணவர்கள் சமூகச் செயற்பாடுகளுக்கு இயலுமை அற்றவர்களாக மாறியுள்ளனர்

## ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கருத்து

இன்று இருக்கின்ற பல்வேறு சமூகமட்ட சீரழிவிற்கு அடிப்படை காரணம் சமூக கட்டமைப்பு சிதைந்து போனமையே என ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற நூற்றாண்டு கல்லூரித் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூகப் பாதுகாப்பென்பது இன்றைய காலகட்டத்தில் முக்கியமானதொன்றாகும், அன்றைய காலங்களில் கிராமங்களில் ஓர் அதிபர் அல்லது ஆசிரியர் வீடுகளில் மக்கள் காலையில் கூடுவார்கள். மக்களை வழிப்படுத்துபவராக அவர்கள் காணப்பட்டார்கள். அது தீர்க்கமான நல்ல முடிவுகளைத் தருகின்ற சமூகங்களைக் கொண்டிருந்தது. இன்று இது மாறியுள்ளது. மீண்டும் இவ்வாறு வரவேண்டும் என்றால் முன்பு போல இறுக்கமான கட்டமைப்புக்கள் சமூகங்களில் உருவாக்கப்படவேண்டும்.

அதுமட்டுமல்ல, பாரம்பரிய விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் அதனை அடுத்த சந்ததிகளுக்கு ஊட்டவேண்டிய தேவை உள்ளது.

கல்வியில் எவ்வாறான சீரமைப்புக்களை ஏற்படுத்தினாலும் சிறந்த ஆசிரியரால்தான் முழுமையான மாணவனை உருவாக்கமுடியும். சமூகத்தில் சவால்களைச் சந்திக்கக்கூடிய மாணவனை உருவாக்குவது சிறந்த ஆசிரியரால்தான் முடியும். இதில் கலாசாலையின் பணி மகத்தானது.

பாரம்பரியக் கற்பித்தல் முறைகள் மாறி நவீன கற்பித்தல் முறை இன்று வந்துவிட்டது. இது மாணவருக்கு நன்மையாகும். ஆசிரியரும் அதற்கேற்றவாறு இசைவாக்கமடைந்தால்தான் சிறந்த சமூகத்தினைக் கொண்டுவரமுடியும்.

தேர்வு முறையிலிருந்து தன்னம்பிக்கை உடையவர்களை உருவாக்கும் சூழலில் நாம் இருக்கின்றோம். கூடுகளுக்குள் வசிக்கும் மாணவர்களாகவே இன்று அவர்கள் இருக்கிறார்கள். சமூகச் செயற்பாடுகளிற்கு இயலுமை கொண்டவர்கள் அல்லாமல் எமது மாணவர்கள் மாறியிருப்பது எதிர்காலத்தினைக் கேள்விக்குறியாக்கியுள்ளது, என்றும் அவர் தெரிவித்தார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2023இல் வெளியிடப்பெற்றது.